சுருக்கம்

கேளிக்கை வரி – தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுவரி விலக்களிக்கப்பட்டது – உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு – ஈடு கட்டுதல் – நிதி ஒதுக்கீடு – உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொகை பகிர்ந்தளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

அரசு ஆணை (நிலை) எண்.22 நாள்.14.02.2008

படிக்கப்பட்டது

1) அரசு ஆணை (நிலை) எண்.75 ந.நி(ம)குவ (ந.நி.4) துறை, நாள்.1.6.2007
2) நகராட்சி நிர்வாகம் ஆணையர் கடிதம் ந.க. எண்.68980/2007/டிபி3, நாள்.26.06.07
3) சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் த.பொ.(பொ) ந.க. எண்.அ1/2363/07 நாள்.1.11.07
4) பேரூராட்சிகளின் இயக்குநர்கடிதம் ந.க. எண்.20959/2006/இ2 நாள்.2.11.07
5) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க. எண்.64772/2007/பி3 நாள்.5.11.07
6) வேலூர் நகராட்சி நகர்மன்ற தலைவரின் கடிதம் எண்.12.2.08

*****

**ஆணை**

முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்களித்ததனால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு எற்பட்ட வருவாய் இழப்பினை சரி செய்ய அரசு ரூ.27.00 கோடி ஒதுக்கியுள்ளது. இத்தொகை டுபிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கணக்கில் 25.9.07 முதல் வைக்கப்பட்டுள்ளது. இக்கணக்குத் தலைப்பிற்கு செயலாளர், ந.நி.(ம)க.வ. துறை, மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி, இத்தொகை அரசின் விருப்பத்திற்கேற்றவாறு மிக முக்கியத்தவம் வாய்ந்த சிறந்த புதுமையான திட்டங்களக்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

2) கல் சாலைகள் மற்றும் மண் ச்ாலைகளை தார் சாலைகள் மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்ற ரூ.19.23 கோடி ஒதுக்கீடு செய்து தருமாறு இரண்டாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் வாணியம்பாடி, ஜின்னா சாலையில் இடிந்து விழுந்த இரும்பு பாலத்திற்கு பதிலாக, புதிதாக பாலம் கட்ட பகுதி – II திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.60.00 இலட்சங்களுக்கு மேல் கூடுதலாக ரூ.40.00 இலட்சங்கள் செலவாகும் என தெரிவித்த அந்த 40.00 இலட்சத்தை சிறப்பினமாக கருதி ஒதுக்கீடு செய்யுமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். வேலூர் நகராட்சியின் நகர் மன்ற தலைவர் மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், வேலூர் நகராட்சிக்கென புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்ட ரூ.2.50 கோடியை கேளிக்கை வரி இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். சென்னை மாநகராட்சி ஆணையர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தின் மூலமும், பேரூராட்சிகளின் இயக்குநர் மேலே நான்காவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தின் மூலமும் கேளிக்கை வரி இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரியிருந்தனர். இப்பொருள் தொடர்பாக அவர்களுடன் மேலும் அரசளவில் கலந்தாலோசிக்கப்பட்டது. அப்போது, சென்னை

மாநகராட்சிக்கென, ஒரு மருந்தகத்திற்கு ரூ.20.00இலட்சம் வீதம், புதிதாக 35 மருந்தகங்கள் கட்ட ரூ.7.00 கோடி ஒதுக்கீடு செய்ய சென்னை மாநகராட்சி ஆணையர் கோரினார். பேரூராட்சிகளின் இயக்குநர், சுற்றுலா பயணிகள் வந்து செல்லக் கூடிய பேருந்து நிலையங்கள் மற்றும் கோவில் நகரங்கள் உள்ள பேரூராட்சிகளில் ஒரு சுகாதார வளாக கட்டுவதற்கு ரூ.10.00 இலட்சம் வீதம் 40 பேரூராட்சிகளில் நவீன சுகாதார வளாக கட்டிடங்கள் கட்டுவதற்க ரூ.4.00 கோடி தேவைப்படும் என்றும், அதில் 75 % தொகையான ரூ.3.00 கோடியை அரசு மானியமாகவும், 40 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உரக்கிடங்குகளை மேம்படுத்த ஒரு பேரூராட்சிக்கு ரூ.10.00 இலட்சம் வீதம் ரூ.4.00 கோடி தேவைப்படும் என்றும், அந்த ரூ.4.00 கோடியை முழுவதுமாக அரசு மானியமாக வழங்கவும், மேலும் 5 பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டிடங்கள் கட்ட ஒர கட்டிடத்திற்கு ரூ.20.00 இலட்சம் வீதம் ரூ.1.00 கோடி தேவைப்படும் என்றும் அத் தொகையினை முழுவதுமாக மானியமாக வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டார்.

3) மேற்சொன்ன நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மாநகராட்சி ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் கருத்துருக்களை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிப்பதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு கட்டும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.27.00 கோடியை கீழ்க்கண்டவாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்து அரசு ஆணையிடுகிறது.

| **நகராட்சி நிர்வாக ஆணையர்** | | | |
|---|---|---|---|
| **பணிகள்** | **திட்ட மதிப்பீடு** | **அரசு ஒதுக்கீடு** | **மொத்தம்** |
| மண் மற்றும் கல் சாலைகளை தார் சாலை மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்றிட | | ரூ.10.00 கோடி | |
| வாணியம்பாடி ஜின்னா சாலையில் புதிய பாலம் கட்ட பகுதி II திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.80.00 இலட்சத்திற்கு மேல் செலவுத் தொகை | | ரூ.0.40 கோடி | |
| வேலூர் நகராட்சி அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட | | ரூ.1.60 கோடி | |
| | | மொத்தம் | ரூ. 12.00 கோடி |
| **சென்னை மாநகராட்சி** | | | |
| 35 புதிய மருந்தக கட்டிடங்கள் கட்ட (ஒரு கட்டிடத்திற்கு ரூ.20.00 இலட்சம் வீதம்) | ரூ.7.00 கோடி | ரூ. 7.00 கோடி (100% மான்யம்) | |
| | | மொத்தம் | ரூ.7.00 கோடி |
| **பேரூராட்சிகளின் இயக்குநர்** | | | |
| சுற்றுலா பயணிகள் வந்து செல்லக் கூடிய பேருந்து நிலையங்கள் மற்றும் கோவில் நகரங்கள் உள்ள 40 பேரூராட்சிகளில் நவீன சுகாதார வளாக கட்டிடங்கள் கட்ட (ஒரு சுகாதார வளாகம் கட்டுவதற்கு ரூ.10.00 இலட்சம் வீதம்) | ரூ.4.00 கோடி | ரூ.3.00 கோடி (75 % மான்யம்) | |
| 40 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை பிரித்தெடுத்து கையாளத் தேவையான அறைகளைக் கட்டவும் (Cubfides) உரக்கிடங்குகளை மேம்படுத்தவும் ஒரு பேரூராட்சிக்கு 10 இலட்சம் வீதாம் | ரூ.4.00 கோடி | ரூ. 4.00 கோடி (100 % மான்யம்) | |

| | | | |
|---|---|---|---|
| 5 பேரூராட்சிகளில் புதிய அலுவலக கட்டிடங்கள் கட்ட (ஒரு கட்டிடத்திற்கு ரூ.20.00 இலட்சம் வீதம்) | ரூ.1.00 கோடி | ரூ.1.00 கோடி (100 % மான்யம்) | |
| | | ரூ.8.00 கோடி | ரூ.8.00 கோடி |
| | | ஆக மொத்தம் | ரூ.27.00 கோடி |

மேலும், மேற்குறிப்பிட்டபடி பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையை சம்மந்தப்பட்ட துறைத் தலைவருக்கு டுபிட்கோவின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் விடுவிக்க வேண்டும். அவ்வாறு விடுவிக்கும்போது மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான மொத்த தொகையில் 50 சதவீதத் தொகையை முன்பணமாகவும் மீதி 50 சதவீதத் தொகையை பணி முடிவுற்றவுடனம் வழங்கப்பட வேண்டும் என்றும், மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான நிர்வாக ஒப்புதலை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களே வழங்கலாம் என்றும், மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த காலமுறை அறிக்கை அவ்வப்போது துறைத் தலைவர்களால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தினபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ, சென்னை–35
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை –3
பேரூராட்சி ஆணையர், சென்னை–108
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 005
மாநில கணக்காயர், சென்னை 600 018
மாநில கணக்காயர், சென்னை 600 018 (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறை தலைவர்
அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை 600 009
நகல்
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை 600 009
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009
மாண்புமிக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை 600 009
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சென்னை – 600 009
நிதித் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை 600 009
நிதித் துறை, சென்னை 600 009
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கல் (வ/செ) துறை, சென்னை – 600 009
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை 600 009
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ அணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்